ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 34 ]
Total No. of Questions : 34 ]

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 4
[ Total No. of Printed Pages : 4

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 02-T (OS)**

**Code No. : 02-T (OS)**

**ಶಿಕ್ಷಣ – I**

**EDUCATION – I**

# ಶಿಕ್ಷಣದ ಪರಿಕಲ್ಪನಾತ್ಮಕ ಆಧಾರಗಳು

# CONCEPTUAL BASIS OF EDUCATION

(ತಮಿಳು ಭಾಷಾಂತರ)

( Tamil Version )

**(ಹಳೆ ಪಠ್ಯವಸ್ತು)**

**( Old Syllabus )**

ದಿನಾಂಕ : 05. 06. 2017 ]
Date : 05. 06. 2017 ]

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10.00 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–1.00 ರವರೆಗೆ ]
[ ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 100

Time : 10.00 A.M. to 1.00 P.M. ]
[ Max. Marks : 100

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*
*Register Number of the Candidate*

## பகுதி – A

I. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். ஒரே வினாவின் பாகம் (a) மற்றும் பாகம் (b) இரண்டிற்கும் விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் பத்து மதிப்பெண்கள் வழங்கப்படும் : 4 × 10 = 40

1. a) கல்வியின் குறிக்கோள்கள் (aims of education), கலைத்திட்டம் (curriculum) மற்றும் கற்பித்தல் முறைகளில் சமூகவிய ன் தாக்கத்தினை (influence) விவரி.

   b) ஒரு தனியாளின் சமூகவயமாகும் முறை (socialization process) நடைபெறும் இரு வழிமுறைகளையும் விவரி. 6 + 4

2. a) கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாப்பதிலும் மற்றும் அதன் மேம்பாட்டிலும் கல்வியின் பங்கினை ஆராய்க.

   b) பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில், வகுப்பறை கற்பித்தல் தவிர மற்ற செயல்கள் மூலம் நீவிர் எவ்விதம் சமூக நல் ணக்கத்தை அடைய முயற்சிப்பீர்கள் ? 6 + 4

3. a) விழுமியங்களை வடிவமைப்பதில் (shaping values) ஊடகங்கள் (media) மற்றும் குடும்பத்தின் தாக்கங்களைச் சுருக்கமாக விவரி.

   b) பா னம் குறித்த மிகையுணர்சி பிரச்சனைகளைத் (gender sensitivity) தீர்க்க கல்வித்துறையில் (in the field of education) மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளில் ஏதேனும் எட்டினை எழுதுக. 6 + 4

4. a) குழந்தையின் பன்முக வளர்ச்சிக்கென (all-round development) பள்ளி மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஏதேனும் ஆறினைப் பற்றி எழுதுக.

   b) ஒரு சிறந்த அண்டைவீடு (a good neighbourhood) எவ்வாறு இருத்தல் வேண்டும் ? அது குழந்தைகளிடம் எவ்விதம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது ?

   6 + 4

5. a) எவ்விதமான செயல்களின் மூலம் சமுதாயம் (community) பள்ளிக்கு உதவ முடியும் ? விவரி.

   b) ஒப்பார் குழு (peer group) என்றால் என்ன ? இவ்வகையான மூன்று குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் ஏதேனும் ஒரு சிறப்பியல்பினைக் குறிப்பிடுக.

   6 + 4

6. a) விழுமியங்கள் சார் கல்வியின் (value education) உத்திகள் (strategies) ஏதேனும் இரண்டினை விவரி.

   b) ஒரு சமூகத்தின் (society) முக்கியமான விழுமியமாக நீவிர் எங்ஙனம் சுற்றுப்புறம் குறித்த விழிப்புணர்வு (environmental awareness) மற்றும் நுகர்வோர் கலாச்சாரம் (consumerism) ஆகியவற்றை கருத முடியும் ? விவரி. 6 + 4

7. a) கல்வி தொடர்பாக இந்திய அரசின் (மத்திய அரசு) செயல்பாடுகள் (functions) யாவை ?

   b) அரசியலமைப்பில் பொதிந்துள்ள பொதுவான விழுமியங்கள் (general values) யாவை ? அவற்றுள் ஏதேனும் இரண்டினை சுருக்கமாக விவரி.

   6 + 4

## பகுதி – B

II. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் **ஏழு** வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஒரு பக்கத்திற்கு மிகாதவாறு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் ஐந்து மதிப்பெண்கள் கொடுக்கப்படும் : $7 \times 5 = 35$

8. ஹண்டர் கமிஷனின் (Hunter's Commission) பரிந்துரைகள் யாவை ?

9. கல்வியின் குறிக்கோளினைத் தீர்மானிப்பதில் மெய்ப்பொருளிய ன் (Philosophy) பங்கினை ஆராய்க.

10. கல்வியின் இயல்பு மற்றும் பணிகள் (Nature and function of education) குறித்து ஒரு குறிப்பு வரைக.

11. முறைசார் மற்றும் முறைசாரா (formal and informal) கல்வியின் ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் யாவை ?

12. கல்வி மெய்ப் பொருளிய ன் இயல்பு மற்றும் செயல்கள் (nature and functions of educational philosophy) குறித்து சுருக்கமாக எழுதுக.

13. கணிதம் மற்றும் அறிவியல் இவற்றின் கொள்கைகளை (principles) எழுதுக.

14. நமது கல்வி முறையில் பெருந்திரள் ஊடகங்களின் (mass media) நேர்மறை மற்றும் எதிர்மறை தாக்கங்களை எழுதுக.

15. கல்வி நோக்கங்களைக் கொண்ட இளம் வயதினருக்கான நிறுவனங்களில் (youth organizations that have educational objectives) ஏதேனும் ஐந்தினைப் பற்றி எழுதுக.

16. ஃப்ரொபெல் (Froebel) நிறுவிய கிண்டர்கார்டனின் (Kindergarten) முக்கிய சிறப்பம்சங்கள் யாவை ?

17. 1961-ஆம் ஆண்டு தேசிய ஒருமைப்பாடு கமிஷனின் (National Integration Commission) முக்கியமான பரிந்துரைகளில் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக.

## பகுதி – C

III. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும், ஒவ்வொன்றிற்கும் அரை பக்கத்திற்கு மிகாதவாறு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று மதிப்பெண்கள் வழங்கப்படும். $5 \times 3 = 15$

18. வேத காலத்தில் கல்வியின் இலக்குகளைக் (goals) குறிப்பிடுக.

19. மெய்ப்பொருளிய ன் மூன்று அடிப்படைகள் / பரிமாணங்களின் (bases / dimensions) பொருளினை (meaning) எழுதுக..

20. சமூகவியல் (Sociology) பார்வையின்படி பள்ளி கலைத்திட்டத்தின் (school curriculum) சிறப்பம்சங்கள் ஏதேனும் ஆறினைக் குறிப்பிடுக.

21. பணிமனை (workshop) மற்றும் செயல்திட்ட முறை (project method) இவற்றைப் பற்றி சிறு குறிப்புகள் வரைக.

22. ஆசிரியர் கல்வியில் (Teacher education) விழுமியங்கள் சார் கல்வியின் (value education) இன்றியமையாமை யாது ?

23. நடத்தை அறிவியல் அறிஞர்களின்படி நடத்தை மாற்றத்தின் மூன்று படிநிலைகள் (three stages of behavioural change) யாவை ?

24. உடல் மற்றும் அறிவு மேம்பாட்டில் (physical and intellectual development) குடும்பத்தின் கல்விப் பணிகளைப் பற்றி எழுதுக.

## பகுதி – D

IV. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண் கொடுக்கப்படும். $10 \times 1 = 10$

25. எடுகேர் (Educare) மற்றும் எடுசீர் (Educere) ஆகியவற்றின் பொருள் என்ன ?

26. கிட்டிங்ஸின் (Giddings) கூற்றுப்படி சமூகவியல் (Sociology) என்பதன் பொருள் என்ன ?

27. 'கட்டற்ற ஒழுங்கு' (free discipline) என்றால் என்ன ?

28. 1992-ம் ஆண்டு மத்திய குழுவினால் (Central Committee) அடையாளம் காணப்பட்ட தேசிய விழுமியங்கள் (National values) ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

29. 'மத்திய நுகர்வோர் நலக் குழு' (Central Consumer Welfare Committee)) எப்போது நிறுவப்பட்டது ?

30. சேவாதள் (Sevadal)-ஐ நிறுவியவர் யார் ?

31. 'வாருங்கள் குழந்தைகளே, நான் உங்கள் பற்கள், வாய் மற்றும் நகங்களைச் சுத்தம் செய்கிறேன்' என ஆசிரியர் கூற வேண்டும் எனக் கூறிய கல்வியாளர் யார் ?

32. 'தண்டம் தசகுணம் பவேத்' (Dandam Dashagunam Bhavet) இவ்வகையான வாதம் (argument) எவ்வகையான ஒழுக்கவாதிகளுடன் தொடர்புடையது ?

33. 'சமயச் சார்பற்ற நாடு, தனியாள் மற்றும் சமூகத்திற்கு சமய சுதந்திரத்தை (religious freedom) வழங்கியுள்ளது.' இக்கூற்றினைக் கூறியவர் யார் ?

34. 'இருமொழி முறையில்' (two languages formula) எந்த இரு மொழிகள் பயிற்றுவிக்கப்படுகின்றன ?